பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : பங்குனி 24 (6—4—68) சனி ★ வெளியூர் : பங்குனி 25 (7—4—68) ஞாயிறு [இதழ் : 246

மாணவ மணிகளே — உண்மை நிலையை உணருவீர்!

அமைச்சர் கருணாநிதியின் உள்ளந்திறந்த உருக்கமான விளக்கம்

என்றென்றும் உங்களோடு இருப்பவனுக்கா இந்த வீண் பழி?

"சுழன்றடித்த உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கிடையே பகை மூட்டுவோரின் கரமே உங்கள் பக்கம் ஓங்கியிருந்தபோது, எனது பேச்சுக்களும் அறிவிப்புக்களும் உங்கள் செவி நுழைந்திடவோ, சிந்தையினைக் கிளறவோ முடியாதபடி வலிவிழந்து நின்றிருக்கக்கூடும்—என்ற ஐயப்பாட்டின் காரணமாக, மீண்டுமொரு முறை உங்கள் காதுகளை என் இதயத்தின் பேச்சைக் கேட்கத் திருப்புமாறு வேண்டிக்கொள்கிறேன்.

'நான் உங்களில் ஒருவன்'

இன்று நேற்றல்ல—எத்தனையோ ஆண்டுகளாக இந்த வாசகம், என்மீது ஒரு குற்றச்சாட்டாக மோய்த்து வந்திருக்கிறது!

'கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம்—கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதை வரிகளைக் கம்பீரமாகப் பாடக் கேட்டிருக்கிறோமே—அந்த வரிகள், எந்தக் கவிதையோடு இணைந்த வரிகள் தெரியுமா?—

"தண் பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றங்காண்
வண்மையொடும் உண்மையொடும் வாழ்ந்திடுங்காண்—
மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங்காண்"

என்று தொடங்கும் கவிதையில் சிரிக்கும் வீர வரிகளே அவை!

திருவாரூரில் என் அரசியல் வாழ்வு, மாணவர் இயக்க வாயிலாகவே மலரத் தொடங்கியது!

மாணவர் வரலாற்றுப் பொய்கையில் வண்ணம் காட்டும் தாமரை மலர்களில் ஒன்றாக நான் இல்லாவிடினும், அந்தத் தாமரை இலையில் தத்தளிக்கும் தண்ணீர்த் துளியாக இருந்த பெருமையை எண்ணி, இன்றைக்கும் மகிழ்ந்து கொண்டிருப்பவன் நான்! அதனை நினைத்து நினைத்துப் பூரித்துப் போகிறவன் நான்!

1938-ல் கட்டாய இந்தியை எதிர்த்து நான் தலைமையேற்று நடத்திய மாணவர் அணிவகுப்பு—பள்ளிக்கூட மறியல்—அந்தச் சின்னஞ் சிறு உள்ளத்தில் கனன்றெழுந்த தமிழ் உணர்வு—எதுவும் மறந்து போய்விடவில்லை! உங்களிடையே அதனைப் பலமுறை சொல்லிச் சொல்லி, களிப்பிடை மூழ்கியுமிருக்கிறேன்!

1965-ல் நடைபெற்ற மொழிப் புரட்சியின்போது உங்கள் உணர்வின் பக்கம் என் அண்ணனும், இன்று அரசு நடத்துகின்ற நாங்களும் இருந்தோமாயினும், வன்முறை நிகழ்ச்சிகளைக் கட்டோடு வெறுத்தோம்! எனினும், என்னைத்தான்,

'உங்கள் தூண்டுகோல்'

எனக் கூறி, பாதுகாப்புச் சட்டம் கொண்டு பழைய அரசினர் தாக்கினர்!

நானூறு மைல் தொலைவுள்ள பாளையங்கோட்டைச் சிறைச்சாலை—பழையதோர் லாரி—நடுவழியில் தாங்காத நெஞ்சு வலி—மார்பில் கையை வைத்து அழுத்திக்கொண்டு நான் துடித்திட்டபோதும்—மாணவ நண்பர்களே—உங்களுக்காக நான் செய்யும் சாதாரணக் கடமையென்றே அதனைக் கருதிக் கொண்டேன்!

இப்போது நினைத்துக் கொள்கிறேன்—

"பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் இரவில் பாம்பும், தேளும், விஷப் பூச்சிகளும் படையெடுத்தபோது, அவைகளுக்கு இரையாகித் தொலைந்து போயிருக்கக் கூடாதா"

என்று.

இன்று, 'இல்லாத பழியைச் சுமத்தச் சில பொல்லாதவர்கள் போட்ட தூபத்துக்கு என்னருமை மாணவர்கள் பலியாகிவிட்டார்களே' என்று என் உள்ளம் புலம்புகிறது!

'மாணவன்' ஒருவனின் வாழ்க்கையைச் சித்தரித்த 'நச்சுக் கோப்பை' நாடகத்திற்காகப் புதுவையிலே தாக்கப்பட்டுக் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்த நான் பெரியாரால் அரவணைக்கப்பட்டபோது—

பொதுத் தேர்தலுக்கு முதல் நாள் கோட்டூரில் காங்கிரசுக் குண்டர்களின் கொலை வெறிச் செயலுக்கு ஒவ்வொரு விநாடியும் ஆளாக நேரிட்டபோது—

கார் கவிழ்ந்து மரண முகப்புக்கே சென்று திரும்பியபோது—முடிந்திருக்க வேண்டிய வாழ்வு,

"இந்த வீணான பழிச் சொல்லைச் சுமப்பதற்கோ தப்பித்துக்கொண்டது"

என எண்ணும் வேளையில், ஏக்கப் பெருமூச்சே என்னிடம் மிஞ்சுகிறது நண்பர்களே!

"இறந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு இழப்புத் தொகை கொடுக்கலாமா?"

இப்படியொரு கேள்வி என்னைப் பற்றி! இந்தச் செயல், நீதி விசாரணையை எப்படியும் பாதிப்பதல்ல! இறந்த தொழிலாளியினுடைய நடவடிக்கை—செயல் முறை—இறந்துபோன சூழ்நிலை—இவைகளை மனதில் கொண்டதல்ல; 'இறந்தவருடைய குடும்பம் திடீரெனத் திக்கற்றுப் போய்விட்டதே' என்ற மனிதாபிமானத்தின் காரணமாகத்தான் அந்தத் தொகை வழங்குவதாக அறிவித்தேன்.

'தொழிலாளியின் காலைப் பிடிப்பதாகப் பேசுவதா?'

ஆமாம்; பேசினேன்; ஏன் பேசினேன்—எதற்காகப் பேசினேன்—முழுப் பேச்சையும் உங்களைப் படிக்க விடவில்லை முடிச்சுப் போடுகிறவர்கள்! என்ன பேசினேன் என்பதை, சட்டமன்றத்தில் விளக்கியிருக்கிறேன்; மீண்டும் விளக்குகிறேன்—

இறந்த தொழிலாளியின் உயிருக்குப் பதில் ஓர் உயிர் கேட்டார்கள் தொழிலாளர் கூட்டத்தார்! அவர்களோ, ஒரு சாவு கொடுத்துவிட்டு என்னைச் சூழ்ந்துகொண்டிருந்தார்கள்—

"உயிருக்கு உயிர் வேண்டுமானால் என் உயிரை எடுத்துக் கொள்ளுங்கள்; யாரையும் பழிவாங்காதிர்கள்; உங்கள் காலைப் பிடிக்கிறேன்—யாரையும் பழிவாங்காதிர்கள்"

என்று கேட்டுக் கொண்டேன். யாருக்காகக் கேட்டுக்கொண்டேன்?—அமளியான நேரத்தில் தூபம் போடுவோர் அருகிருந்தபோது, இதனை ஆழ்ந்து சிந்திக்க முடியாமல் போயிருக்கலாம் உங்களுக்கு; இப்போது உங்களையே நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள்—நான் யாருக்காகத் தொழிலாளிகளிடம் கெஞ்சினேன் என்ற உண்மை புலப்படும்.

"தொழிலாளிமீது தடியடி! மாணவர்களைத் துப்பாக்கியால் சுடச் சொல்லியிருக்கிறேன்"

இப்படி நான் பேசியதாக ஒரு கட்டுக்கதை! நம்புகிறீர்களா நண்பர்களே! 'மாணவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக செய்தி வந்திருக்கிறது' என்று சொன்னேன்; 'தவலை' காணாமற்போய்விட்டது என்பதைத் 'தலை' காணாமற் போய்விட்டது—என்று மாற்றிப் பேசுவதில் வல்லவர்கள், உங்களை ஆக்கிரமித்துக்கொண்டு நம்மிடையே உள்ள நட்புறவுக்கு நெருப்பு மூட்டிவிட்டார்கள்!

அந்த நெருப்பெடுத்து நீங்களும், என் 'கொடும்பாவி'க்கு நெருப்பு மூட்டிவிட்டீர்கள்! அதற்காக நான் கவலைப்படமாட்டேன்—கலங்கிடமாட்டேன் என்பதை, என்னோடு பழகியவர்களே—நீங்கள் நன்றாக அறிவீர்கள்!

நான் குலுக்கிய கரம்—நான் சந்தித்த முகம்—நான் சங்கமமாக்கிய இதயம்—என் 'கொடும்பாவி'க்கு நெருப்பு வைப்பதால், எனக்கு ஆத்திரமா பிறக்கும்?

வியப்பு பிறந்தது உண்மை!

'எனக்கும் உங்களுக்கும் என்ன பகை?' என்ற கேள்வி பிறந்தது உண்மை!

நீங்கள்தான் எனக்குத் தவறிழைத்தீர்களா—இல்லை—நான்தான் உங்களுக்குத் தவறிழைத்தேனா—எதுவுமில்லையே!

இரு கிழமைகளுக்கு முன்பு காஞ்சி பச்சையப்பன் கல்லூரி—ஸ்டான்லி மெடிகல் கல்லூரி—மார்ச் 24—வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரி—சென்னைச் சம்பவம் நடந்த மார்ச் 25-ம் நாள் மாலையில் சென்னை அரசினர் கலைக் கல்லூரி—நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உங்கள் அன்புக் கடலில் தெப்பமாக மிதந்தேன்; மறந்துவிட்டீர்களா?

மார்ச் 26—மாநிலக் கல்லூரி; மார்ச் 27—பச்சையப்பன் கல்லூரி; மார்ச் 31—அனைத்துக் கல்லூரி விழாக்களில் கலந்துகொள்ள ஒப்புதல் அளித்திருந்தேன்; இவையெல்லாம், நம்மிடையே பகையிருப்பதற்கு அடையாளங்களா?

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

இராஜஸ்தான் சட்டமன்றத்தில் கைகலப்பு!

ஜெய்ப்பூர், ஏப். 5—
இராஜஸ்தான் சட்டமன்றத்தில் ஆளும் காங்கிரசுக் கட்சிக்கும்—எதிர்க் கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்ற வாக்குவாதம் கைகலப்பில் முடிந்திருக்கிறது; இதன் காரணமாக, காங்கிரசு உறுப்பினர் ஒருவர் காயமடைந்திருக்கிறார்.

இதுவரையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சியைக் கண்டிராத இராஜஸ்தான் சட்டமன்றம், நேரம் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

இராஜஸ்தான் கால்வாய் சம்பந்தமான அரசாங்கக் குறிப்பு ஒன்றை விவாதிப்பதா அல்லது ஏனைய விஷயங்களைக் கவனிப்பதா என்பது குறித்து ஆளும் கட்சிக்கும்—எதிர்க் கட்சிக்கும் ஏற்பட்ட காரசாரமான விவாதமே இந்தக் கைகலப்புக்குக் காரணமாகும்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே தலைமைதாங்கிய துணை அவைத் தலைவர், அவையை 15 நிமிடத்திற்கு ஒத்திவைத்தார்; உடனே எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர், அவைத் தலைவரின் இருக்கையில் போய் அமர்ந்துகொண்டார்; அவரை சபைக் காவலாளர் மிகவும் கஷ்டப்பட்டு வெளியேற்றினார்.

இந்த மோதலின்போதுதான் காங்கிரசுக் கட்சியின் முன்னணி உறுப்பினர் காயமடைந்தார். அவர் மீது ஒலிபெருக்கிக் கருவியை யாரோ எறிந்ததாகக் கூறப்படுகிறது.

பதவியேற்க அமைச்சர் வரவில்லை!

காரணம் கூற மறுப்பு

சண்டிகார், ஏப். 5—
பஞ்சாப் அமைச்சரவையில், பக்த்வார் சிங் என்ற ஜனதா கட்சி எம்.எல்.ஏ. துணை அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்யப் போவதாக அறிவிக்கப்பட்டு, அது தொடர்பான செய்திகள் சேகரிக்கும் பொருட்டு அழைக்கப்பட்டிருந்த பத்திரிகையாளருக்கு ஏமாற்றம் ஏற்பட்டது!

ஆர்வத்துடன் 'ராஜபவனி'ல் காத்திருந்த பத்திரிகையாளரிடம் முதலமைச்சர் இலட்சுமண சிங்கில், 'பக்தவார் சிங் பதவி ஏற்பதற்கு நேரம் ஏதும் குறிப்பிடப்படவில்லை' எனக் கூறினார்.

பத்திரிகையாளர், பக்தவார் சிங்கிடம் தொடர்பு கொண்டபோது, தாம் இராஜபவனுக்கு வராமல் இருந்ததற்கான காரணத்தைச் சொல்ல மறுத்து விட்டார்.

சென்ற டிசம்பர் 26-ந் தேதி வரையில் அமைச்சரவையில் ஓர் துணை அமைச்சராக இருந்த இவர், மாணவர்களுடன் ஏற்பட்ட ஒரு தகராறு காரணமாக இராஜினாமா செய்தவராவார்.

56 ஆண்டு சரித்திரத்தில் நடைபெற்றிராத நிகழ்ச்சி

திரைப் படக் கொட்டகைகளின் முன் நடிகர்கள் மறியல்

பம்பாய், ஏப். 5—
இந்தி சினிமா உலகின் தலைசிறந்த நடிகர்களும் தயாரிப்பாளர்களும் இன்று தங்களது படங்களைக் காட்டிக்கொண்டிருந்த பம்பாய் திரைப் படக் கொட்டகைகள் முன் மறியல் போராட்டம் நடத்தினர்.

இந்தியத் திரைப்படத் துறையின் 56 ஆண்டுச் சரித்திரத்தில் இப்படியொரு ஒரு நிகழ்ச்சி நடந்ததில்லை.

பம்பாய் நகரில் வழக்கமாக இந்திப் படங்களை வெளியிட்டுக் கொண்டிருந்த பல தியேட்டர்களும் காட்சிகளை நிறுத்தியுள்ளன.

தியேட்டர் சொந்தக்காரர்களுக்கும்—பட உற்பத்தியாளர்—விநியோகிப்பாளருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு, இம்மறியல் போராட்டம் காரணமாகப் புதியதோர் கட்டத்தை அடைந்திருக்கிறது!

3 திட்டங்களிலும் தமிழகத்துக்குக் கிடைத்ததென்ன?

சின்னசேலம் இரயில்பாதைத் திட்டம் என்ன ஆயிற்று?

இரயில்வே அமைச்சரிடம் உண்மை 'தடம்' புரள்வதேன்?

மக்கள் சபையில் மு. தெய்வீகன் 'முதல் முழக்கம்'!

"மாமன்றத் தலைவர் அவர்களே! தங்களுடைய அனுமதியின் பேரில் எனையீன்ற செந்தமிழ்த் தாயிடம் நான் ஆங்கிலத்தில் பேச அனுமதிபெற விரும்புகிறேன்.

"செந்தமிழ்த் தாயே! தேமதுரத் தமிழோசை இம்மன்றத்தில் ஒலிக்கும் காலம் அணித்தே உளது. அதுவரையில் நான் ஆங்கிலத்தில் பேசுவதற்கு மன்னிப்பாயாக!

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது"

என்று திருவள்ளுவர், பேரறிவுப் பெட்டகமான திருக்குறளில் சொல்லுகிறார். எனவே, நான் இனியவே பேசி நல் இதயம் படைத்த அமைச்சர் பூனச்சா அவர்களிடமிருந்து சில நன்மைகள் பெற விரும்புகிறேன்."

இவ்வாறு மக்களவையில், இரயில்வே வரவு–செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது ஆற்றிய கன்னிப் பேச்சில், கழக உறுப்பினர் மு. தெய்வீகன் அவர்கள், துவக்கத்தில் குறிப்பிட்டார்; அவரது உரை வருமாறு:—

தடம்புரண்டுவிட்டதா?

இவ்வளவு ஆண்டுகளில் இரயில்வேத் துறை எவ்வளவோ சாதனைகளைச் செய்திருக்கலாம்; ஆனால், இரயில்வேயின் வளர்ச்சி நிதி ஆண்டுக்கு ஆண்டு கணிசமாகக் குறைந்து கொண்டுதான் வருகிறது ரூ. 3 கோடியை மட்டும் மீதியாக விட்டுவைத்துவிட்டு, சென்ற ஆண்டிலே மட்டும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 27-கோடியை எடுத்துக் கொண்டிருக்கிறார் அமைச்சர்.

பொருளாதாரப் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு புனைந்துரைப்பதோ, சித்து விளையாடுவதோ எனக்குக் கைவராத கலைகள்; ஆனாலும், எனக்கே இந்த நிலை மகிழ்ச்சியளிப்பதாக இல்லை.

செங்கற்பட்டுக்கும்—சின்ன சேலத்துக்கும் ஓர் இரயில் பாதை அமைக்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கை ஒன்று நீண்ட காலமாக இருந்து வருவது தெரியாத ஒன்றல்ல. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைக் கண்டிப்பாக அமைத்தாக வேண்டுமென்று தமிழக அரசு முன்னுரிமை தந்து பரிந்துரைத்திருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால், 1964-லேயே, அப்போது அமைச்சராக இருந்த திரு. ஓ.வி. அழகேசன் அவர்கள், இப்படி ஓர் இரயில் பாதை அமைக்கும் செயற்குறிப்பு மத்திய அரசிடம் இருப்பதாக எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்.

உடுக்குறியிடாத 2893 எண் கேள்விக்கு விடையளிக்கையில், தமிழக அரசு பரிந்துரைத்திருக்கும் 6 புதிய பாதைகள் முன்னுரிமையைச் சுட்டிக் காட்டவில்லை என்று இரயில்வே அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால் 1957-ல், தமிழகச் சட்டமன்றத்தின் உடுக்குறியிடாத 270 எண்ணுள்ள கேள்விக்குப் பதில் அளிக்கையில், 'அந்த 6-பாதைகளும் அதிக முன்னுரிமையுடையன' என்று பரிந்துரைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

எனவே, இரயில்வே அமைச்சரின் தகவல், தவறானது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது!

இரயில்வே அமைச்சரிடம், உண்மை, தடம் புரண்டுவிட்டது என்பதை நான் பெரிதுபடுத்த விரும்பவில்லை. ஆனால் கிட்டத்தட்ட இருபதாண்டுகளாக இருந்துவரும் இந்தக் கோரிக்கையை உடனடியாகக் கவனிக்க வேண்டுகிறேன்.

முன்னுரிமைப் பட்டியலில் உள்ள 6 பாதைகளில் இதுவும் ஒன்று.

இந்தப் பாதை பற்றிய போக்குவரத்து ஆய்வும் முடிந்துவிட்டது. புதிய பாதை அமைக்கப்படுவதற்கான நியாயமான தேவைகள் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனவே, தம்முடைய இரயில்கள் ஒடும் நிதானத்தைப்போல் அமைச்சரும் செயல்படாமல் விரைந்து இந்தப் பாதையை அமைக்க வேண்டுகிறேன்.

தென்னகத்திற்குக் கேடு பயக்கும் முயற்சியா?

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இன்னொரு உண்மையையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் சேர்ந்து தமிழகத்தில் இதுவரை இரண்டே இரண்டு புதுப் பாதைகளே போடப்பட்டிருக்கின்றன.

ஆனால் அதே காலத்தில், மத்தியப் பிரதேசம்—பீகார்—குசராத் மாநிலங்களுக்கு எட்டெட்டுப் பாதைகளும், ஒரிசா—இராஜஸ்தான் —மராட்டியம்—வங்காளம்—அசாம் மாநிலங்களுக்கு, மாநிலத்துக்கு நான்கு பாதைகளும் கிடைத்திருக்கின்றன.

இதை, கண்ணுக்குத் தெரிந்து வேண்டுமென்றே தென்னகத்தைக் கெடுக்கும் முயற்சி என்று ஏன் கருதக்கூடாது என்று இரயில்வே அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன்.

ஒரே நிலையில் செங்கற்பட்டு—சின்ன சேலம் பாதை அமைப்பது முடியவில்லை என்றால், இப்போதைக்கு சின்ன சேலம்—திருவண்ணாமலையையாவது இணைக்கலாமே! புதிய பாதை அமைப்புக்கு இரயில்வேத் துறைக்கான தேவைகள் அனைத்தும் இந்தச் சின்னப் பாதையிலும் திருப்திகரமாக உள்ளன!

ஒன்றாக இணைக்க ஏன் வழிகோலக் கூடாது?

சென்னை எழும்பூர் நிலையத்தையும் — சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தையும் இணைக்க வேண்டிய தேவையையும் நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன்.

இந்த இரண்டு நிலையங்களுமே விரிவாக்குவதற்கு வசதியற்ற இடங்களிலே அமைந்துள்ளன.

எனவே, சென்னையில் உள்ள தீவுத் திடலிலோ, வேறேதே



னும் ஒரு வசதிமிக்க இடத்திலோ ஒரு புதிய நிலையத்தைக் கட்டி, சென்ட்ரல்—எழும்பூர் நிலையங்களை ஒன்றாக்க முடியுமா என்று இரயில்வே அமைச்சகம் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

கன்னியாகுமரிக்கான பாதை அமைக்கப்படுமானால் இதன் மூலம், டில்லிமுதல் கன்னியாகுமரிவரை ஒரே இருப்புப் பாதை அமைந்ததாகச் சொல்லலாம்.

முதலிடம் தருக!

விழுப்புரம் – தாம்பரம் பாதை மின்மயம் ஆக்கப்பட்டது; ஆனால் இரட்டைப் பாதை இன்மையால், வண்டிகளின் விரைவு தடைப்படுகிறது.

ஒற்றைப் பாதையில் அதிக வண்டிகள் விடுவதால் அதிக அளவில் 'கிராசிங்குகள்' ஏற்பட்டு, வண்டி செல்வது தாமதம் ஆகிறது.

ஆகவே, தாம்பரம் — விழுப்புரம் பாதையை இரட்டிப்பதற்கு முதலிடம் தரப்படவேண்டும்.

ஆவன செய்வீர்!

திருக்கோயிலூரில் பயணிகள் தங்க ஒரு கூடம் அமைக்கப்பட வேண்டும்.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் வடக்கனேந்தலில் ஓர் அவுட்ஏஜென்சி நிறுவியாகவேண்டும்.

திருவண்ணாமலைக்குச் செல்லும் பயணிகள் தொகை பெருகி வருவதைக் கருத்தில்கொண்டு, சென்னை எழும்பூரிலிருந்து புறப்படும் சில வண்டிகளில் 'தனிப் பெட்டிகள்' இணைக்க வேண்டுகிறேன்.

சென்னை எழும்பூரிலிருந்து புறப்படும் எல்லா வண்டிகளிலும் இன்னம் அதிகப் பெட்டிகள் இணைத்திட வேண்டும்.

விரைவு கருதி சென்னை செல்லும் ஜனதா எக்ஸ்பிரசுக்கு டீசல் எஞ்சின் பொருத்தப்படவேண்டும்.

சமதர்மம் பற்றிச் சிந்தனை செலுத்துவதாகச் சொல்லப்படும் இந்த அரசு, அதிகமான மூன்றாம் வகுப்புக்களைக் கொண்ட ஜனதா எக்ஸ்பிரசை விரைவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில் இன்னொன்றும் சொல்ல நினைக்கிறேன்.

ஏன் இந்தக் கூத்து?

கோடை விடுமுறையின்போது தென்னகம் செல்லும் வண்டிகளில் நெரிசல் அதிகமாக இருக்கிறது.

15-20 மணி நேரம் வரிசையில் நின்றால்தான், பயணத்துக்கான இடம் 'ரிசர்வ்' செய்ய முடிகிறது. அவர்கள் வரிசையில் நிற்பதில்லை; உட்கார்ந்திருக்கிறார்கள்—படுத்திருக்கிறார்கள்—தூங்குகிறார்கள் — வரிசையிலிருந்தபடியே சாப்பிடவும் செய்கிறார்கள்!

இதனாலே, எத்தனை 'மனித மணிகள்' வீணாகின்றன என்று கணக்கெடுத்து ஆய்வது மெத்தப் பலனுள்ளதாக அமையும் என்று எண்ணுகிறேன்.

எனவே, இந்த நெரிசலைத் தவிர்த்திட, கோடைக்காலம் முழுமைக்கும் சேர்த்து 3, 4, வண்டிகளை அதிகமாக விடுவது போதாது; நாளைக்கு ஒரு வண்டியாவது அதிகம் விடவேண்டும்.

எப்படிச் சொல்லுவது?

இரயில்வேயில் பரிமாறப்படும் உணவு பற்றிச் சொல்லவே வேண்டாம். விலைகள் அதிகமாய் உள்ளன; தரமோ நேர் முரணாக—மட்டமாக இருக்கிறது!

நாடாளுமன்ற உறுப்பினன் ஆன பிறகு எனக்குள்ள ஒரே குறை இதுதான்; சென்னைக்கும்—டில்லிக்கும் இடையே நான் பயணம் செய்யும்போதெல்லாம், இந்த இரயில் சாப்பாட்டை இரண்டு மூன்று முறைஉண்பதைத்தவிர வேறு வழியில்லையே என்பது தான்!

ஒவ்வொரு பயண முடிவிலும் இந்த இரயில் சாப்பாட்டினால் எனக்கு ஏற்படும் வயிற்றுத் தொல்லைக்காக, என் அன்புக்குரிய இரயில்வே அமைச்சருக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இதில் பால் பவுடரை மட்டுமே உபயோகிக்கிறார்கள். கொஞ்சம் முனைந்து திட்டமிட்டு நடவடிக்கை எடுப்பதன்மூலம், குறிப்பிட்ட சில பெரிய நிலையங்களில் புதுப் பால் வாங்கி, வழங்குவது எளிதாகுமல்லவா?

(3 ம் பக்கம் பார்க்க)

தீண்டாமைக்கொடுமையை ஒழிக்கத் தவறிவிட்டது காங்கிரசு ஆட்சி

ஆப்பிரிக்க நிற வெறியாட்டங்களைப்போல் இந்தியாவிலும் நடப்பதா?

நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப். 4—

"நாடு விடுதலை பெற்று இருபதாண்டுகளாகியும் தீண்டாமையையும், சாதிக் கொடுமைகளையும் அடியோடு ஒழித்துக் கட்டக் காங்கிரசு ஆட்சி தவறிவிட்டது"

என்று நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் கடுமையாகக் குற்றஞ்சாட்டினர்.

ஆந்திரத்திலும், உத்தரப் பிரதேசத்திலும் ஆதித் திராவிடர்களுக்கு அண்மையில் இழைக்கப்பட்ட கொடுமை குறித்து மக்களவையில் இரண்டு மணி நேர விவாதம் நடைபெற்றது.

இந்த இரு மாநிலங்களிலும் நிகழ்ந்த கொடூர நிகழ்ச்சிகளை, ஆப்பிரிக்காவிலும், அமெரிக்காவிலும் நடக்கும் நிற வெறியாட்டங்களுடன் ஒப்பிட்டுப் பலர் பேசினர்.

"இந்தச் சமூகக் கொடுமையை ஒழித்துக்கட்ட, இதனை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கொள்ள வேண்டும்" என்று பேசியவர்கள் அனைவரும் வற்புறுத்தினர்.

சட்டங்களை இயற்றுவதன் மூலமே இந்தக் கொடுமையை ஒழித்துவிடுவதற்கில்லை என்றும், சமுதாய அநீதிகளைச் செய்யாமல் இருக்கும்வகையில் தடுக்கக்கூடிய ஒவ்வொரு சட்ட விதியையும் தீவிரமாகப் பயன்படுத்த ஒவ்வொருவரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் பொதுவாகக் கருத்தறிவிக்கப்பட்டது.

ஆந்திரத்தைச் சேர்ந்த திரு. தென்னேட்டி விசுவநாதன் பேசுகையில், 'போலீசுத் துறையில், தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு நியாயமான விகிதத்தில் வேலை வாய்ப்பளிக்க வேண்டும்; இதன் மூலம் இக்குற்றம் நிகழாமல் இருக்க வாய்ப்பு ஏற்படும்' என்று யோசனை தெரிவித்தார்.

"இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் மத்திய அரசுக்குத் தனிப் பொறுப்பு உண்டு" என்று, திரு இரேன் முகர்ஜி (கம்.) கூறினார்.

"இந்தியாவில் உள்ள சமுதாய அமைப்பையே அடியோடு திருத்தி அமைக்க வேண்டும்" என்று, திருமதி விஜயலட்சுமி பண்டிட் கருத்தறிவித்தார்.

"கலப்புத் திருமணங்களைச் செய்வதன் மூலமே சாதி வேற்றுமைகளையும், தீண்டாமைக் கொடுமையையும் அறவே ஒழிக்க முடியும்"

என்று தி.மு.க. உறுப்பினர் திரு. க. இராசாராம் வலியுறுத்தினார்.

விவாதங்களுக்குப் பதிலளித்த உள்துறையமைச்சர் திரு. சவாண் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்துக்கென அரசியல் சட்டத்தில் உருப்படியான விதிகளைச் சேர்க்க வேண்டும் என்று கூறப்பட்ட யோசனையை ஏற்றுக்கொள்வதாகவும், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்துக்குக் காங்கிரசு முயற்சி செய்யவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கூறினார்.

ஆந்திரத்தில் நிகழ்ந்த காட்டுமிராண்டிச் செயல்

'கண்டிக்கச் சொல் கிடைக்கவில்லை'- தலைமையமைச்சர் வேதனை

புதுடில்லி, ஏப் 6—

ஆந்திர மாநிலத்திலும், உத்தரப்பிரதேசத்திலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை பற்றி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது, தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி குறுக்கிட்டுப் பேசுகையில், ஆந்திரமாநிலம் சாஞ்சி சேர்லா என்ற சிற்றூரில் ஒரு தாழ்த்தப்பட்ட சிறுவனை அடித்து, உயிருடன் கொளுத்திய நிகழ்ச்சிபற்றி உருக்கமுடன் குறிப்பிட்டதாவது:—

"இந்த நிகழ்ச்சி, நாட்டிற்கே அவமானம் விளைவிப்பதாகும்.

"இந்தக் காட்டுமிராண்டிச் செயல்களைக் கண்டனம் செய்வதற்குத் தக்க சொல்லே எனக்குக் கிடைக்கவில்லை.

"ஒரு சிறுவன் இவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு உணர்ச்சியே இல்லையா?—மனிதத் தன்மையே இல்லையா?—அவர்கள் இந்த அட்டூழியங்களை எவ்வாறு பார்த்துக் கொண்டிருந்தனர் என்பதையெல்லாம் நினைக்க நினைக்க எனக்குத் திகைப்பே ஏற்படுகிறது."

ஏழைகளை வாழவைக்கப் புதிய அரசு தீட்டும் திட்டங்கள்

'11 ஆண்டுச் சாதனைகளை ஈராண்டுகளில் நிறைவேற்றுவோம்'

'முக்கிய அடிப்படைத் தேவைகள் மூன்றும் கிடைக்க உடனடி முயற்சிகள் செய்யப்படும்'

மீனவர் குடியிருப்புத் திட்டக் கல்நாட்டு விழாவில் அமைச்சர்கள் விளக்கம்

சென்னை, ஏப். 6—

சென்னை–திருவல்லிக்கேணி கடற்கரைக்கு அருகிலுள்ள அயோத்தியாகுப்பத்தில் வசிக்கும் மீனவ மக்களுக்குத் தமிழக வீட்டு வசதி வாரியம், ரூ. 22-இலட்சம் மதிப்பீட்டில் 348 வீடுகள்—மூன்றடுக்குக் கட்டடங்களாகக் கட்டுவதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

ஒவ்வொரு வீட்டிலும் தங்கும் அறை—சமையல் அறை—குளியல் அறை—வராந்தா ஆகியவை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று மாடி கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டும் விழா, ஏப். 4-ம் நாள் நடைபெற்றது; சட்டத் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் தலைமைதாங்கினர்; கல்வி–தொழில் துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டினர்; வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்; வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. பூவராகமூர்த்தி அனைவரையும் வரவேற்றார்.

செ. மாதவன்

விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் அமைச்சர் மாதவன் கூறியதாவது:—

"கடலோரத்தில் வாழும் குடிசைவாழ் மக்களுக்கு—குறிப்பாக மீனவ சமுதாயத்தினருக்குக் குறைந்த வாடகையில் வீடுகள் கட்டித் தரும் திட்டம், கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு முதன்முதலாக இந்தப் பகுதியில் தான் நிறைவேற்றப்படுகிறது.

தலைநகரத்தில் ஏழைகளுக்கு—குடிசைவாழ் மக்களுக்கு இதுபோன்ற வீடுகள் ஏராளமாகக் கட்ட வேண்டுமென்று அரசு திட்டமிட்டு இருக்கிறது; இதற்காகப் பல கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது; அதிலே ஒரு திட்டம்தான் இந்த அயோத்தியாகுப்பம் பகுதியில் நிறைவேற்றப்படவிருக்கிறது. இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டார்; அதற்காக இன்று அடிக்கல் நாட்டப்படுகிறது.

'கடலோரத்தில் வாழும் மீனவ சமுதாய மக்களுக்கு அங்கேயே வீடு கட்டிக் கொடுத்தால்தான் பலன் கிடைக்கும்' என்ற அடிப்படையில் இங்கே வீடு கட்டப்படுகிறது.

இதுபோல் முதலில் ஒரு இடத்தில் வீடுகள் கட்டப்பட்டு—அவற்றில் மீனவர்கள் குடியேறுமல்—மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; இப்போது அதில் மீனவர்களும் குடியேறி இருக்கிறார்கள்.

இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு மீனவ மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம். ஒவ்வொரு இடமாக அவர்கள் காலி செய்து கொடுத்தால்தான் அந்த இடத்தில் வீடுகள் கட்டி, பிறகு குடியேற முடியும்.

இதுபோன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும், மக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் நல்ல முறையில் நடைபெற முடியும்.

இதிலே பல தொல்லைகளும் இருக்கின்றன. வீடுகள் கட்டி முடித்த பிறகு, 'யார் முதலில் குடி போவது' என்ற பிரச்சினை வரும்; அப்போது இங்குள்ள மக்கள் ஒத்துழைப்புத் தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

வீட்டு வசதி வாரியம் செய்யக்கூடிய பல திட்டங்களில், இம்மாதிரி வீடு கட்டி குறைந்த வாடகையில் கொடுப்பது ஒன்று; இன்னும் சில இடங்களில் இடம் மட்டும் கொடுத்து அவர்களே குடிசைப் போட்டுக் கொள்ள வழி செய்கிறார்கள்.

இப்போது முதல் அமைச்சர் அவர்கள், தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டு அதன்படி கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இந்த மூன்று முறைகளிலும், குடிசைவாழ் மக்களுக்குக் குடியிருப்பு வசதி செய்யப்படுகிறது.

மாடிக் கட்டிடம் கட்டுவதற்குச் செலவு அதிகமாகிறது. இடம் மட்டும் கொடுப்பதாக இருந்தால் தேவையான இடம் கிடைப்பதில்லை. நம்மிடத்தில் திட்டங்கள் இருக்கின்றன. மாநில அரசின் ஒத்துழைப்பும் இருக்கிறது.

'இப்படி வீடுகள் கட்டிக் கொடுப்பதாக இருந்தால் காலதாமதம் ஆகும்; குறைந்த விலையில் வீடுகள் கட்டி உடனடியாகக் கொடுக்கவேண்டும்' என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் யோசனை தெரிவித்தார்கள்; இதைச் செய்வதற்குச் சட்டம் இடமளிக்கவில்லை—சிக்கல் இருக்கிறது!

'வீட்டு வசதி வாரியத்தின் திட்டங்களை நிறைவேற்ற அதிகமான பணம் தேவை' என்று மாநாடு கூட்டி மத்திய அமைச்சரிடம் எடுத்துச் சொல்லப்பட்டு—நம்முடைய கருத்தை அவரும் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்.

'வீட்டு வசதி வாரியம் பொது மக்களிடத்தில் கடன் எழுப்பிக் கொள்ளக்கூடிய வாய்ப்பு தர வேண்டும்' என்று தமிழக அரசு சார்பில் மத்திய அரசிடம் கூறியிருக்கிறோம். இப்போது மாநகராட்சிக்கு அந்த உரிமையை நமது அரசு பொறுப்பேற்றதும் வழங்கி இருக்கிறது.

மத்திய அரசு அனுமதி அளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். என்னைப் பொறுத்த வரையில், இதற்கு மத்திய அரசு அனுமதி தேவையில்லை என்று கருதுகிறேன். நான் படித்த சட்ட அறிவைப் பொறுத்தவரையில், அங்கே உள்ள நிதி இலாகா அனுமதி கொடுத்தால் போதும் என்று கருதுகிறேன்.

இதுபோன்ற வீடுகளைத் தொழிலாளர்களுக்கும் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கருதுகிறோம்; 'வீட்டு வசதி வாரியம் கட்டுகிற கட்டிடத்தில் முதலீடு செய்ய எங்களுக்கு வாய்ப்பு கொடுத்தால் தயாராக இருக்கிறோம்' என்று சில முதலாளிகள் கூறியிருக்கிறார்கள்.

நிச்சயமாக இந்த அரசு, தொழிலாளர்களுககும் இதுபோன்ற வீடுகளைக் கட்டிக் கொடுக்க திட்டமிட்டிருக்கிறது; அனைவருடைய ஒத்துழைப்பும் அதற்குத் தேவை."

இரா. நெடுஞ்செழியன்

தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அடிக்கல் நாட்டிப் பேசுகையில் கூறியதாவது:—

"இதுபோன்ற வீடுகள் கட்ட வேண்டும் என்று ஆண்டுதோறும் சட்டமன்றத்தில் கருத்துக்கள் எடுத்துவைக்கப்பட்டு—நிதி வசதி இல்லாமல் தள்ளி வைக்கப்பட்டு—இப்போது புதிய அரசு வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது

ஐந்தாறு ஆண்டுக்காலமாக மத்திய அரசும்–மாநில அரசும், இந்த இடத்தைக் கவனித்துக் கொண்டே இருந்தது. இங்கே எந்த அலுவலகத்துக்குக் கட்டிடம் கட்டலாம் என்று யோசனை செய்துகொண்டு இருந்தார்கள்; அதற்காகப் பல்வேறு முயற்சிகள் செய்யப்பட்டு வந்தது.

புதிய அரசு வந்த பிறகு இந்த இடத்தில் வாழ்கின்ற மீனவர்களுக்கே வீடு கட்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டது.

சென்னையில் மிக அதிகமாக விலை போகக்கூடிய கடற்கரையில் மையமான இடமிது; அப்படிப்பட்ட இந்த இடம் ஏழை மீனவர்களுக்கே பயன்பட வேண்டும் என்ற வகையில் திட்டமிடப்பட்டது.

இங்கே உள்ள பெரியவர்கள் கூடி, 'யார் யார் வேறு இடத்துக்குக் குடி போகலாம்' என்பதை முடிவு செய்யவேண்டும்; அப்படிச் செய்தால், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கலாம்.

கடலை நம்பி—விலையை நம்பி—மீனை நம்பி வாழ்க்கை நடத்தக் கூடியவர்கள் இந்த வீடுகளில் குடியேறலாம்.

அவர்களின் எண்ணிக்கை, கட்டப்படும் வீடுகளைவிட அதிகமாக இருக்குமானால், இங்கே நீண்ட நாளாகக் குடியிருக்கக் கூடியவர்களுக்கு முதலில் வாய்ப்பு கொடுக்கலாம்.

வேறு இடங்களுக்குச் செல்லுவதாக 75 பேர் என்னிடத்தில் பெயர் கொடுத்து இருக்கிறார்கள். இதுபோல யார் யார் வேறு இடத்துக்குப் போக வேண்டும் என்பதை இங்கே உள்ள பெரியவர்களும், நாட்டாண்மைக்காரர்களும் கூடி முடிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

1956-ம் ஆண்டிலிருந்து 1967-ம் ஆண்டு வரை பதினோரு ஆண்டுகளில் 8629 வீடுகள் தான் கட்டப்பட்டன; இப்போது, 1967—68-ல் 1286 வீடுகளும், 1968—69-ல் 2590 வீடுகளும் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது!

பதினோரு ஆண்டுகளில் கட்டிய வீடுகளைவிட இரண்டு ஆண்டுகளில் கட்டப்படுவது அதிகமாகும்.

ஏழைகளுக்குத் தேவையானது உணவு—உடை இருப்பிடம் தான்! ஒழுகாத வீடும்—சூடான சோறும்—கிழியாத உடையும் இருந்தால் போதும்! அறுசுவையும் மாடமாளிகையும் தேவையில்லை!

ஏழைகளை வாழ்விக்கும் வகையில் இந்த அரசு, படி அரிசித் திட்டத்துக்காக இந்த ஆண்டு ஏழரை கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது.

இங்கே கட்டப்படும் வீடுகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள மீனவர்கள் முன்வர வேண்டும்."

ஏ. கோவிந்தசாமி

விழாவுக்கு வருகை தந்த வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில் கூறியதாவது:—

"நாட்டின் உணவு நெருக்கடியைத் தீர்த்துவைப்பதில் மீனவ சமுதாயத்தினருக்கு பெரும் பங்கு உண்டு.

உணவு நெருக்கடி ஏற்படுகிற நேரத்தில், சத்துள்ள சுவையான மீனை அளிக்கிறார்கள்; மீன் சாப்பிடுகிறவர்களுக்கு இந்த உண்மை தெரியும்.

மீன் சாப்பிடாதவர்கள்கூட மெலிந்து இருந்தால், மீன் எண்ணெயை 'டானிக்'காகச் சாப்பிடுவார்கள்.

கடற்கரை வழியாகத்தான் நாங்கள் தினந்தோறும் கோட்டைக்குப் போகிறோம்; அப்போது இங்கே உள்ள மீனவ மக்களில் குடிசைகளைப் பார்த்துக் கொண்டுதான் போகிறோம்.

தீப்பிடித்தாலும் காற்றடித்தாலும் ஆபத்து ஏற்படும் வீடுகளில் வாழ்ந்துகொண்டு இருக்கிறீர்கள்; இதை மாற்றியமைக்கும் வகையில்தான் இங்கு புதிதாக வீடுகள் கட்டப்படுகின்றன.

"திருபெரும்புதூர் தொகுதியில் 1958-ல் ஒரு பேருந்து நிலையத்திற்கு கால்கோல் செய்து, 1967-ல்தான் பஸ் வந்து நின்றது.

இந்த வீடுகள் அது மாதிரி இல்லாமல், உடனடியாகக் கட்டி முடிக்கப்படும்.

இந்த வீடுகளுக்கு நகரசபை செய்து தரவேண்டிய வசதியை தாமதமில்லாமல் செய்யவேண்டும் என்று இங்கே வந்திருக்கும் மத்தியக் குழுத் தலைவர் முனுசாமி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மீனவ சமுதாயத்தின் சார்பில், 'இந்த இலாகாவின் அமைச்சர்' என்ற முறையில், இந்த வீடுகளைக் கட்ட முயற்சி எடுத்துக் கொண்ட மற்ற அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

விமானங்கள் மூலம் மல்லிகை அனுப்பும் கோரிக்கை வெற்றி

சென்னை, ஏப். 5—

"விமானம் மூலம் மதுரையிலிருந்து சென்னைக்கு மல்லிகைப் பூக்களை அனுப்புவதற்கான மதுரைவாழ் மலர் வியாபாரிகளின் கோரிக்கையை நிறைவு செய்யும் பொருட்டு ஏப். 15-ம் நாள் முதல் மதுரை வழியாகச் சென்னைக்கும்—கோவைக்கு மிடையே நாள்தோறும் அதிகப்படியாகப் புதிதாக 'டகோடா' விமானங்கள் விடுவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது"

என, இந்திய விமான கார்ப்பரேஷனின் சென்னை வட்டார நிர்வாகி அறிவித்துள்ளார்.

மதுரை—கோவை நகரங்கள் இணைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

சென்னை--இராயப்பேட்டை திருவள்ளுவர் மன்றம்

சென்னை — இராயப்பேட்டை திருவள்ளுவர் மன்றத்தின் 11-ம் ஆண்டு நிர்வாகிகள் தேர்வு 24—3—68 அன்று திரு. த. சீனுவாசன் தலைமையில் நடைபெற்றது:—

தலைவர்: இராச. இராசசேகரன் பி.ஏ.; செயலாளர்: வே. நா. கண்ணன்; பொருளாளர்: அரசு. இராமு; செயற்குழு உறுப்பினர்கள்: கோ. ச. நீதிமன்னன், இராசு. பாலசுப்பிரமணியம் எல். சி.இ, க. செகதீசன்.

3 திட்டங்களிலும்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

உப்பின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் பிராந்திய முறை ஒன்று செயல் முறையில் இருப்பதாக அறிகிறேன்.

ஏதோ தேவையான அளவு உற்பத்தியாகும் பொருள்களில் உப்பும் ஒன்று; அதன் நடமாட்டத்தைககூட இரயில்வே தன் கட்டுப்பாடுகளால் தடுக்கிறதே!

உப்பு விருப்பம்போல உலவ வழி விடுங்கள்!

தூத்துக்குடி உப்புப் போட்டு பஞ்சாபில் சப்பாத்தி செய்யுங்கள்!

அபத்தமான வாதம்!

'மற்ற நாடுகளில் ஒரு கிலோ மீட்டருக்கு வசூலிக்கப்படும் கட்டணத்தைவிட, இந்தியாவில் இரயில் கட்டணம் மிகக்குறைவு' என்று இரயில்வே அமைச்சு தன்னுடைய வெளியீடு ஒன்றில் பறைசாற்றி இருக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால், 'இது ரொம்ப அபத்தமான வாதம்.'

அமைச்சரகம் குறிப்பிடுகின்ற அந்த நாடுகளில் மக்களின் வாழக்கைத் தரம் என்ன? அந்த நாட்டில் நபர் வருமானம் என்ன?

குறைந்த கட்டணம் பற்றி உரக்கக் கூவத் தெரிகிற இரயில்வே அமைச்சர், இந்தப் புள்ளி விவரங்களையும் வெளிமிட்டால் நன்றாக இருக்குமே!

நகைச்சுவைக்கு வேறு நல்ல விஷயங்களை எடுத்துக் கொள்ளுங்கள்; இந்தப் பிரச்சினை வேண்டாம்!

ஏற்பட்டுள்ள அதிருப்தியைத் தூண்டிவிட முயலாதீர்!

பணம் தேவைப்படுகிற புதிய திட்டங்களுக்குத் தடைபோடுவதோடு மட்டும் அமைவதில்லை நம்முடைய இரயில்வே அமைச்சர்! ஒரு நிலையத்தின் பெயர் மாற்றுவதற்குக்கூட அவர் ஒப்புதல் அளிக்கமாட்டார்!

அச்சுறுத்திப் பேசி எனக்குப் பழக்கமில்லை; அதை நான் விரும்பவும் இல்லை; ஆனால், 'டால்மியாபுரம்' என்ற நிலையத்தின் பெயரை, 'கல்லக்குடி' என்று மாற்றுவிட்டால் மக்களின் அதிருப்தியை மீண்டும் அவர் தூண்டிவிடுவதாகவே சொல்லுவேன்."

வெல்லக் கட்டுப்பாடு--

மத்திய அரசு உத்தரவு

புதுடில்லி, ஏப். 5—

சென்ற வாரத்தில் வெல்லத்தின் விலை மிகவும் அதிகமாக உயர்ந்ததை முன்னிட்டு, வெல்லத்தைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தி மத்திய அரசு ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த உத்தரவு உடனடியாக அமுலுக்கு வரும்.

"மக்கள் சாப்பிடுவதற்கான பொருள்கள் அல்லது மாட்டுத் தீவனத்திற்கு மட்டும்தான் வெல்லத்தைப் பயன்படுத்தலாம்; மது வகைகளைத் தயாரிப்பதற்கு வெல்லத்தைப் பயன்படுத்தக்கூடாது" என்று அந்த உத்தரவு கூறுகிறது.

மருதிப்பட்டி ஊராட்சி

தமிழக அரசின் மொழிக் கொள்கைக்குப் பாராட்டு

மருதிப்பட்டி ஊராட்சிமன்றக் கூட்டம், 21—3—68 அன்று தலைவர் திரு. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, தமிழக அரசு இந்தியை ஒழித்து, தாய்மொழியான தமிழ், தமிழகத்தின் ஆட்சிமொழியாகவும் பாடமொழியாகவும் இருக்கவும், ஆங்கிலம் துணை மொழியாக இருக்கவும் வழி செய்து இரு மொழித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக இவ்வூராட்சி மன்றத்தின் சார்பில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க நிறவெறிகொண்ட மூன்ருவது பலி

ஆபிரகாம் லிங்கன்--கென்னடி வரிசையில் லூதர் கிங்

உலக வரலாற்றில் உயரிடம் பெற்றுவிட்ட உத்தமர்

மனித்குல மாமணிகளான மகாத்மா காந்தி—ஆபிரகாம் லிங்கன்—ஜான் கென்னடி ஆகியோர் வரிசையில் இடம் பெற்றுவிட்டார் — அமெரிக்க நீக்ரோ மக்களின் தலைவர் மார்ட்டின் லூதர் கிங்!

டாக்டர் லூதர் கிங், நீக்ரோ மக்களின் குடியுரிமைக்காக, காந்தீய வழியில் பல அறப்போர்களை நடாத்தி வெற்றி கண்டவர். முப்பத்தெட்டே வயது நிரம்பிய அவர், இசைக் கலையில் பட்டம்பெற்ற ஒரு பெண்மணியை, 1953-ல் தமது வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டார். கணவனுக்கு உறுதுணையாக அந்த அம்மையாரும் அறப்போராட்டங்களில் பங்குகொண்டார்.

நான்கு பிள்ளைகட்குப் பெற்ருேரான இத்தம்பதிகள், நீக்ரோ மக்கள் அனைவரையுமே தங்கள் குழந்தைகளாகவே கருதிப் பாடுபட்டனர்! இலட்சியத்திற்காக எதையும் தாங்கும் இதயத்தினராகச் செயல்பட்டனர்! அதற்குக் கிடைத்த பரிசாகத்தான், வெள்ளை நிறவெறி பிடித்த கயவனின் கைத்துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகியிருக்கிருர் டாக்டர் கிங்!

'கிறித்துவ சமயத்தின் முதல் எதிரி கம்யூனிசம்' என்றுபறைசாற்றியவர் அவர் — மனித உரிமைக்காகப் போராடியதற்காக—சாடிய அவரே ஒரு கம்யூனிஸ்டு என்று சாட்டப்பட்டதுண்டு.

படித்துத் தேர்ச்சி பெற்று மத குருவாகத் திகழ்ந்த அவர், தம் உள்ளத்தில் நியாயம் எனத் தோன்றியதையே செய்து வந்தார்; பிறரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் அஞ்சினரில்லை.

1964-ம் ஆண்டில் — தமது 35-வது வயதிலேயே நோபல் சமாதானப் பரிசினைப் பெற்ருர் திரு. லூதர் கிங். இவ்வளவு இளம் வயதில் இந்தப் பரிசைப் பெற்றவர் மிகச் சிலரே.

1955-ம் ஆண்டில் அலபாமா மாநிலத்தில் மாண்ட் கோமரி என்னும் நகரில் பேருந்துகளில் வெள்ளையருக்கும் — கறுப்பு நிறத்தவருக்கும் தனித் தனி இடம் ஒதுக்கபபட்டதை எதிர்த்து நடத்திய மறியலுக்கு டாக்டர் கிங் தலைமைதாங்கிய போது, அவர், ஊர்பேர் தெரியாத ஒரு சாதாரண மத குருவாகவே இருந்தார். ஓராண்டு நீடித்த அந்த அறப்போரில் அவருடைய புகழ் உலகெங்கும் பரவியது.

1929-ல் ஜார்ஜியா மாநிலத்தில் அட்லாண்டா நகரில் பிறந்து பென்சில்வேனியா மாநிலத்தில் செஸ்டர் நகர் குரோசியர் சமயப் பள்ளியில் படித்து, பின் 1954-ல் பாஸ்டர் பல்கலைக் கழகத்தில் முறையான வேதக் கல்வியில் டாக்டர் பட்டம் பெற்றவர் டாக்டர் லூதர் சிங்.

நீக்ரோவர்களின் உரிமைகள் அதிகரித்து, வாழ்க்கை வசதிகள் பெருகுவதற்கு வியட்நாம் போர்ச் செலவு இடையூருக இருப்பதை எண்ணி, அந்தப் போரை டாக்டர் சிங் எதிர்த்தார். 'அங்கு அமெரிக்கா போரிடுவது அறத்தின்பாற் பட்டதன்று' என்றும், 'மக்களுக்குச் செலவிட இயலாத நிலையில் பணம் வீணுகிறது' என்றும் அவர் வெளிப்படையாகக் கண்டித்தார்; இதனுல், மிதவாத நீக்ரோக்களும், வெள்ளையர் பலரும் அவருக்குப் பகைவராயினர்! அமெரிக்கத் தலைவர் ஜான்சனும் இதனுல் அவருக்கு விரோதியானுர்!

லூதர் கிங் கொலையுண்ட நிகழ்ச்சியை அமெரிக்க அதிபர் ஜான்சன், 'மிருகத்தனமான செயல்' எனக் குறிப்பிட்டுக் கண்டித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில், டாக்டர் கிங் மறைவு குறித்து, வருத்தம் தெரிவித்து தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி உருக்கமாகப் பேசினுர்; ஒரு நிமிட நேரம் எல்லா உறுப்பினரும் எழுந்து நின்று மறைந்த பெரியாருக்குத் தங்கள் மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மார்ச் 29–ந் தேதியாவது போக்குவரத்துத் தொழிலாளர் செங்கொடி யூனியன்காரர்கள் வேலை நிறுத்தம் செய்ய அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள்—சென்னை நகரில்!

உண்மை இவ்வாறு இருக்க, உங்களுக்கும்—எனக்கும் என்ன பகை?

மார்ச் 25 இரவு விடியற்காலை 3 மணிக்கு நானும், அமைச்சர்கள் கோவிந்தசாமி, முத்துசாமி ஆகியோரும் சட்டக் கல்லூரி விடுதி வாயிற்புறம் சென்று ஆங்கு கூடியிருந்த தொழிலாளர்களைக் கலைந்து போகும்படி கேட்டுக்கொண்டது எதற்காக? உங்கள் நலனுக்காக அல்லவா? அப்போது அங்கிருந்த தொழிலாளர்கள்,

"மாணவர் பாதுகாப்பு ஆட்சி ஒழிக—
மாணவர் ஏஜெண்டு கருணுநிதி ஒழிக"

என்றுதான் உரத்த குரல் எழுப்பினர். அவர்கள், ஒரு சாவு கொடுத்த ஆத்திரத்தில் இருந்தனர்; ஆயினும், அவர்கள் சினம் தவிர்த்து உங்களைப் பாதுகாக்கவே நான் அங்கு ஓடோடி வந்தேன்; 'கோள்முட்டி'கள் உங்களைச் சூழ்ந்திராத நேரத்தில் இதனை எண்ணிப் பாருங்கள்!

அரசியல் இலாபம் தேடுவோருக்கு, அண்ணு கொடும்பாவி—கருணுநிதி கொடும்பாவி எரிக்கப்பட்டது மகிழ்வூட்டும் சம்பவங்கள்! வயிற்றெரிச்சலைத் தணிக்கின்ற நிகழ்ச்சிகள்! அய்யோ! அதற்கு உங்களைப் பயன்படுத்திக்கொண்டார்களே—அதனை நினைக்கத்தான் இதயம் குமுறுகிறது!

எனக்கு உயிர்போனுல், 'கொள்ளி' வைக்க ஐந்தாறு பிள்ளைகள் உண்டு; உயிரோடு 'கொள்ளி' வைக்கவே நீங்கள் விரும்புகிறீர்கள் என்ருல், என் மாணவத் தங்கங்களே! அந்த மலர்க் கரங்களை எடுத்து என் கண்களில் முதலில் ஒத்திக்கொள்வேன்!

'பதவியில் இருக்காதே—விலகிவிடு' என்று கூறுங்கள்—அது எனக்குப் புரிகிறது! அதனைச் சொல்லித் தந்தவர் நோக்கமும் தெரிகிறது!

ஆனுல், 'பைத்தியம்' என்று குற்றஞ்சாட்டி நாயைக் கொல்வது போல், வீணுன பழிசுமத்திப் பதவி விலகச் சொல்லாதீர்கள்!

'தமிழருக்கு – தமிழுக்கு – மாணவர்களுக்கு – தொழிலாளருக்கு – சனநாயகத்திற்கு – அரசியல் பண்பாட்டுக்கு – விரோதமான அரசு இது' என்று தமிழக மக்கள் கருதுவார்களேயானுல், நான் என்ன—என்னை இணைத்துக்கொண்டிருக்கின்ற இந்த அரசே பதவி விலகத் தயாராக இருக்கிறது!

அன்று—உங்களைப் பேட்டி காணவே மறுத்த அரசு இருந்தது; போலீசாரை உங்கள் கல்லூரி விடுதிகளில் நுழையச் செய்து உங்களைத் தாக்கிச் சீரழித்த அரசு இருந்தது!

இன்று—மருத்துவக் கல்லூரி விடுதியில் நடந்துவிட்ட சம்பவத்திற்காக—காயம்பட்ட மாணவத் தோழர்களுக்காகக் கண்கலங்குகிற அரசு இருக்கிறது!

நேற்று, 'ஒரு மாணவருக்குக் காலைத் துண்டிக்க வேண்டுமாம்' என்று ஒரு காங்கிரசு ஏடு செய்தி வெளியிட—உடனே துடித்துப்போய் — மருத்துவ நிபுணர்களிடம் தொடர்பு கொண்டு உண்மை அறிந்த பின்னரே ஆறுதல் பெற முடிந்தது என்ருல்!

'மாணவர்களை அடக்கியதில் மலைப் பாறைபோல் அசையாது நின்ருர்' என்ற மகிமைமிகு பட்டத்தைத் திரு. நந்தாவிடம் பெற்றவர் முன்னுள் முதலமைச்சர்!

இந்நாள் முதலமைச்சரோ, நீங்கள் இருக்குமிடம் தேடிவந்து—இழிவும் பழியும் அள்ளி வீசப்படினும்—அமைதி காத்த புத்தர்போல் விளங்குகிருர்!

இப்போது நடந்த இந்தி எதிர்ப்புப் போரின்போது சென்ட்ரல் இரயிலடியில் கூடியிருந்த உங்களிடம் ஓடிவந்து வேண்டுகோள் விடுத்தேனே—அதனை வட நாட்டு ஆங்கில ஏடுகள்கூட வரவேற்று எழுதின! இங்கிருக்கும் காங்கிரசு ஏடுகளோ, நையாண்டி செய்தன—மறந்துவிட்டீர்களா, அதனை!

"மாணவர்களுக்காக ஒரு சட்டசபையா?
அவர்களுக்காக ஒரு அவசரத் தீர்மானமா?"
எனக் கேட்டவர்கள் எங்கே?

"இந்தி எதிர்ப்புத் தீர்மானம் அரசியல் மோசடி"

என்று கையெழுத்திட்டு அறிக்கை வெளியிட்டவர்கள் எங்கே—அவர்களை அடையாளம் புரிந்துகொள்ளுங்கள்!

உங்களில் சிலரது உடலில் காயம் மட்டுமல்ல—உள்ளத்தில் ஏற்பட்ட புண்கூட ஆறட்டும்!

எரிச்சலில் கோல் கொண்டு குத்திவிடுவோர் உமதருகே இருக்கின்ருர்!

நான் தொலைவில் இருப்பதாக எண்ணுதீர்! என் இரத்தத்தில்—இரத்த அணுக்களில்—நீங்கள்தான் இருக்கின்றீர்கள்!

நம்மை யாரும் நிரந்தரமாகப் பிரிக்க முடியாது; அந்த நம்பிக்கையோடு இந்த விளக்கத்தை முடிக்கிறேன்.

அன்புள்ள

மு. கருணுநிதி

லூதர் கிங் மறைவு --- அண்ணு அறிக்கை

நிறவெறி கேட்கும் பலி இன்னும் எத்தனை?

சென்னை, ஏப். 5—

அமெரிக்க நீக்ரோ தலைவர் மார்ட்டின் லூதர் கிங் மறைவு குறித்து தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக முதலமைச்சருமான அறிஞர் அண்ணு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:—

"மனிதகுல சமத்துவத்துக்காகப் போராடிய தீரர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற அதிர்ச்சிதரும் செய்தியைக் கேட்டவுடன், துணுக்குறும் வேதனை ஏற்பட்டு என்னைத் துக்கத்தில் ஆழ்த்தியது.

"நிற வெறியை எதிர்த்த வீரர்—சமாதானத் தூதர்—மனித கௌரவத்தை உயர்த்தியவர்—அவர்தான் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்! மனிதகுல சகோதரத்துவத்துக்காகப் போராடும் எல்லோரும் அவரிடம் மிக உயர்ந்த மரியாதை வைத்தனர்! நிற வெறியை எதிர்த்து டாக்டர் கிங் அவர்கள் நடத்திய போரை உலகம் முழுவதும் பாராட்டும்!

"டாக்டர் லூதர் கிங் ஒரு வீரராக மறைந்தார்; ஆனுல், நிறத்தின் பெயரால் இருக்கும் அநாகரிகம் என்னுகும்? இன்னும் எத்தனை பேர் இதற்குப் பலியாகப் போகிருர்கள்?

"அட்டூழியத்திற்கு இது மேலும் ஒரு உதாரணமல்ல; மனிதகுல நன்மைக்காகப் போராடுபவர்களுக்கு விடப்பட்ட சவால் இது! உலகம் முழுதும் இத்தகு அட்டூழியத்தை எதிர்த்து வீறுகொண்டு எழவேண்டிய தருணம் வந்துவிட்டது!

"மறைந்த அந்த வீரருக்கு நமது அஞ்சலியை செலுத்துவதுடன் சாதி—மத நிற வேறுபாடின்றி உலகம் முழுமையும் மனித சமத்துவம் ஏற்பட அவர் விரும்பி மேற்கொண்ட பணிக்கு நம்மையும் அர்ப்பணித்துக் கொள்வோம்."

அன்புடையீர்! வாரீர்!

சந்திரமண்டலத்திற்கு

தாங்கள், தங்கள் நண்பர்களுடனும் குடும்பத்தினருடனும்

7-4-68 ஞாயிறு காலை 9 மணிக்கு

13 விநோதமான பிரிவுகளில் 'சுற்றுலா' மேற்கொள்ள—
தங்களின் தேவைகளை மலிவாகத் தேர்ந்தெடுக்க—

1-4, மவுண்ட்ரோடில்

(தமிழக முதலமைச்சர்
அறிஞர் அண்ணுவின்
திருவுருவச் சிலைக்கு அருகாமையில்)

மாண்புமிகு வருவாய் - உணவுத் துறை அமைச்சர்
உயர்திரு. கே. ஏ. மதியழகன் பி.ஏ.
அவர்கள் முன்னிலையில்

மாண்புமிகு தொழில் - கல்வி அமைச்சர்
உயர்திரு. இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.
அவர்கள்

தங்களின் வருகைக்கெனத்
திறந்துவைக்க இசைந்துள்ளார்

வாரீர்! வருகை தாரீர்! தேவையைப் பெறுவீர்!

ரேஷன் வியாபாரிகள் சங்க ஆண்டு விழா

சென்னை நகர ரேஷன் வியாபாரிகள் மத்திய செயற்குழுவின் இரண்டாம் ஆண்டு விழா, 8—4—68 காலை 9-மணிக்கு மயிலாப்பூர் இராஜேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெறும்; பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணுநிதி விழாவைத் துவக்கி வைப்பார்: உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், டாக்டர் எம். சந்தோஷம் எம்.பி, கே. விஞயகம், எம். எல்.ஏ. கேசவராவ், காளிதாஸ் சேட் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

பாலர் அரங்கம்

ஏப்ரல் 7-ந் தேதி பிற்பகல் 2-மணி; மாலை 4-15 மணிக்கு

"டிக்கோவும் சுரு மீனும்"

(கடல் அடியில் மீன் வேட்டைக் காட்சிகள் நிறைந்தது)

கட்டணம் வழக்கம்போல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு; அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.